Regd.with the Registrar of Newspapers for India.No.TN TAM /2007/22101
Regd.TN/CC(S)Dn/326/07-09

# [illegible] எக்காளம்

VOL 3 ISSUE 4 தனிப்பிரதி ரூ 20/= நவம்பர் 2009



ஆறு காரியங்களைக்
**கர்த்தர்** வெறுக்கிறார்,
ஏழும்
**அவருக்கு** அருவருப்பானவைகள்.
அவையாவன:
மேட்டிமையான கண்,
பொய் நாவு,
குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங் கை,
துராலோசனையைப் பிணைக்கும் இருதயம்,
தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங் கால்,
அபத்தம் பேசும் பொய்ச்சாட்சி,
சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல்,
ஆகிய இவைகளே.
- நீதிமொழிகள் 6:16-19

**மேன்மை பாராட்டுகிறவன்..**
**கர்த்தரைக்குறித்தே**
**மேன்மை பாராட்டக்கடவன்**
- எரேமியா 9:24

Owned and Published by : S.Paulraj Kennedy from A-1,Deju Plaza,No.2,South Avenue,Srinagar Colony, Saidapet,Chennai-600 015.Ph:+91- 44 - 22353500
Printed by : Jolly Peter at Sharp Offset Printers,New No.96,Old No.223,Peters Road,Royapettah, Chennai-600 014.Ph:+91- 44 - 28480607
Editor: Nija Kennedy




**...விக்கிரகங்கள் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவைகள்...**

**- உபாகமம் 7:25**

நம் தேவன் ஜீவனுள்ளவர். அவர் வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறார். அவரை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ள வேண்டும். அவருக்கு இணையாக கையினால் உண்டாக்கிய சிலைகளை உண்டாக்கி வழிபடுவது தவறு. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்; ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம் (யாத்திராகமம் *20: 3,4*). விக்கிரகங்கள் சாபத்தை கொண்டு வரும். கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள். விக்கிரகாராதனைக்கு விலகியிருக்க வேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிரதானமாக நம் வாழ்க்கையில் இருக்க வேண்டும்.

கையினால் செய்யப்பட்ட விக்கிரகங்களை வணங்குவது விக்கிரகாராதனை. தேவனுக்குரிய இடத்தில் மனிதர்களையோ, வேறு காரியங்களையோ வைப்பதும், விக்கிரகாராதனைக்கு ஒப்பாகும். நம்முடைய இருதயத்தில் முதலிடத்தை தேவனுக்கு கொடுக்க வேண்டும். அதன்பின்புதான் கணவன், மனைவி, பிள்ளைகள். தேவனுக்குரிய இடத்தில் குடும்பத்திலுள்ளவர்களையோ, தலைவர்களையோ, வேலையையோ, பணத்தையோ, புகழையோ, பதவியையோ, பொருட்களையோ வைத்திருப்பது சிலை வழிபாட்டுக்கு சமம். தேவனை நம்பாதவர்கள்தான் மனிதர்களை, பணத்தை, பதவியை, புகழை, வேலையை நம்பி, அதையே பெரிதாகப் பார்ப்பார்கள். இப்படிப்பட்டவர்களை சபிக்கப்பட்டவர்கள் என்று வேதம் கூறுகிறது (எரேமியா *17:5*). நாசியிலே சுவாசமுள்ள மனிதனை நம்புவதை விட்டுவிட வேண்டும். பெலவீனமான மரித்துபோகும் (எந்த நேரமும் அவன் சுவாசம் நின்று போகும்) மனிதர்களுக்கு ஒரு வல்லமையும் இல்லை. ஆகவே மனிதர்களை நம்புவதை நிறுத்துங்கள். என்றென்றைக்கும் வாழ்கின்ற நம்புவதற்கு தகுதியுள்ள ஜீவனுள்ள தேவனை நம்பி நாம் வாழும்போது நம் வாழ்க்கை செழிக்கும். தேவனை நம்புகிறவன் (ஆசீர்வதிக்கப்பட்டவன்) பாக்கியவான் (நீதிமொழிகள் *16:20*).



## துதி, ஆராதனை

தேவன் தன்னை ஆராதித்து, தொழுது கொள்ளுவதற்காகவே மனிதனை உண்டாக்கினார். ஆனால் மனிதனோ, தேவன் படைத்தவற்றையும், தன் கையினால் உண்டாக்கின சிலைகளையும், சொரூபங்களையும் வணங்குவதால் தேவன் வேதனைப்படுகிறார். அப்படிப்பட்டவர்களை கர்த்தர் அருவருக்கிறார். அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை (கலாத்தியர் *5:20,21*). நாம் பாடல்களைப் பாடி, கர்த்தரை துதிப்பதும், ஆராதிப்பதும் எதற்காகவென்றால், அவரே நம்மையும், மற்ற எல்லாவற்றையும் உண்டாக்கினார், சகலமும் அவருக்குச் சொந்தமானது. விஷேஷமாக நாம் அவருக்கு சொந்தமானவர்கள் என்பதை அறிக்கை செய்வதாகும் (ஏசாயா *43:21*). நாம் களிமண், அவரே குயவன் என்பதை ஒருநாளும், ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

## தீர்க்கதரிசனங்கள் எதற்காக?

**ஆகையால், என் விக்கிரகம் அவைகளைச் செய்த தென்றும், நான் செய்த சுரூபமும், நான் வார்ப்பித்த விக்கிரகமும் அவைகளைக் கட்டளையிட்டதென்றும் நீ சொல்லாதபடிக்கு, நான் அவைகளை முன்னமே உனக்கு அறிவித்து, அவைகள் வராததற்கு முன்னே உனக்கு வெளிப்படுத்தினேன்.**

**- ஏசாயா 48:5**

நம் வாழ்க்கையில் ஒரு காரியம் நடப்பதற்கு முன்பாகவே கர்த்தர் தம்முடைய பரிசுத்த ஆவியினால் அவருடைய ஊழியக்காரர்களாகிய தீர்க்கதரிசிகளைக் கொண்டு பேசுகிறார். வருங்காரியங்களை ஏன் முன்கூட்டியே கர்த்தர் பேசுகிறாரென்றால், அந்த காரியம் நடக்கும்போது, கர்த்தரே அந்த காரியத்தை செய்கிறார் என்பதை நாம் அறிந்து கொள்ளும்படியாகவே (யோவான் *13:19,14:29*). மகிமையை கர்த்தருக்கு மாத்திரமே நாம் செலுத்த வேண்டும். நான் கர்த்தர், இது என் நாமம், என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன் (ஏசாயா *42:8*). காரியங்கள் வாய்ப்பது, நமக்கு சூழ்நிலைகள் சாதகமாக அமைவது, சுகம், பெலன் கிடைப்பது எல்லாமே கர்த்தரிடத்திலிருந்துதான். பல மருத்துவர்களை பார்க்கலாம். பலவகையான மருந்துகளைச் சாப்பிடலாம், ஆனால், சுகம் கொடுப்பது பரம வைத்தியராகிய கர்த்தரே. இன்று அநேகர் அந்த மருத்துவரிடம் போனேன். எனக்கு சுகம் கிடைத்தது என்றும், இன்ன மருந்தை சாப்பிட்டேன் சுகம் கிடைத்தது என்றும், மருத்துவருக்கும், மருந்துக்கும் மகிமை செலுத்துகிறார்கள். மருத்துவரையும், மருந்தையும் உண்டாக்கின கர்த்தருக்கே நாம் மகிமை செலுத்துவோம்.

எனக்கு தெரிந்த ஒரு குடும்பத்தில் கணவர் நல்லவராக இருந்ததால், அவருடைய மனைவி, அந்த கணவனின் சொற்படியே எல்லாவற்றையும் செய்வார்கள். ஆனால், பரிதாபத்திற்குரிய விஷயம் என்னவென்றால், கர்த்தரையும், வேதத்தையும் அந்த சகோதரி விட்டுவிட்டார்கள். அவர்களுடைய கணவனின் சொல்லே அவர்களுக்கு வேதவாக்கு. ஒரு சமயம் மிக முக்கியமானதொரு முடிவு எடுக்கவேண்டிய சூழ்நிலையில், அந்த சகோதரன் எடுத்த முடிவு, அந்த குடும்பத்தை போராட்டத்திலும், குழப்பத்திலும் கொண்டுபோய் விட்டுவிட்டது. அந்த குடும்பம் சமாதானத்தை இழந்து போயிற்று.

மனுஷர்கள் நல்லவர்களாக இருக்கலாம். ஆனால்,அவர்கள் தேவனாகிவிடமுடியாது. வருங் காரியங்களை மனுஷனால் அறிந்து கொள்ள முடியாது. கர்த்தரும், வேதமும் அவசியம். இந்த இடத்தை எந்த ஞானியும், எந்த புஸ்தகமும் நிரப்பமுடியாது. கர்த்தர், கர்த்தர்தான்; மனுஷன், மனுஷன்தான். கர்த்தருக்குள்ள இடத்தை கணவனுக்கோ, மனைவிக்கோ கொடுத்து விடாதீர்கள்.

## விக்கிரகாராதனை - கீழ்ப்படியாமை



கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் இருப்பதும் விக்கிரகங்களை தொழுது கொள்ளுவதற்கு சமம். கர்த்தர் சாமுவேல் தீர்க்கதரிசியின் மூலம் சவுல் ராஜாவிடம், அமலேக்கியரை முறியடித்து, அவர்களுடைய உடைமைகள் எல்லாவற்றையும் அழித்துப்போடும்படி சொன்னார். ஆனால், சவுலோ ஆடுமாடுகளில் முதல் தரமானவற்றை அழித்துப் போட மனதில்லாமல், அவனுக்கு பயன்தருபவற்றை வைத்துக் கொண்டு, பயனற்றவற்றை அழித்துப் போட்டான். சவுல் தமக்கு முழுமையாக கீழ்ப்படியவில்லை என்று கர்த்தர் வருந்தினார். கர்த்தர் சவுலிடம் எல்லாவற்றையும் அழித்துப்போடும்படி கூறினார். ஆனால், சவுலோ எல்லாவற்றையும் அழிக்கவில்லை. கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் தன்னுடைய இஷ்டம்போல் நடப்பதென்பது நம்மை நாமே ஆளுகை செய்வதாகும்.

சவுல் தான் எடுத்த முடிவே சரியானது என்றுஎண்ணி கர்த்தருடைய வார்த்தையை புறக்கணித்து கீழ்ப்படியாமல் போனான். அதனால் கர்த்தர் அவனை ராஜாவாயிராதபடிக்கு புறக்கணித்து தள்ளினார்.

**இரண்டகம் பண்ணுதல் பில்லிசூனிய பாவத்திற்கும், முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது.**

**- 1 சாமுவேல் 15:23**

இன்றைக்கும் அநேகர், தீர்க்கதரிசிகள் மூலமாக கர்த்தர் அவர்களோடுகூட பேசினாலும், அவர்கள் அந்த வார்த்தையை புறக்கணித்து அசட்டை செய்துவிட்டு கீழ்ப்படியாமல் தங்கள் மனதுவிரும்பியபடியே செய்கிறார்கள். தாங்கள் செய்வதுதான் சரி என்று எண்ணி, தங்களையே ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். முரட்டாட்டம் பண்ணுதல் (இறுமாப்பு, அகந்தை) அவபக்திக்கும், சிலையை வணங்குவதற்கும் ஒப்பானதாகும். இப்படிப்பட்டவர்கள் தாங்கள் எடுத்த முடிவை மாற்றிக் கொள்ள மறுக்கும் பிடிவாத குணமுடையவர்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், கர்த்தரோடு சரியான ஐக்கியம் இல்லாமல் கடமைக்காக ஆலயம் செல்வது, கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்வது, உபவாசிப்பது, காணிக்கை கொடுப்பது பயனற்றவை. இவைகள் கர்த்தருக்கு பிரியமானவைகளல்ல. கர்த்தருக்கு கீழ்ப்படிந்து நொறுங்குண்ட, உடைந்த உள்ளத்தோடுகூட தேவனிடத்தில், தங்களை தாழ்த்தி வருபவர்களை அவர் ஒருபோதும் புறக்கணிக்கமாட்டார். தான் செய்த பாவத்திற்காக மனம் வருந்தி, புதிய வாழ்க்கை வாழ்வதற்கு விரும்பும் இருதயத்தையே தேவன் விரும்புகிறார்.



## நாம் கர்த்தரல்ல

**துன்மார்க்கனை நீதிமானாக்குகிறவனும், நீதிமானைக் குற்றவாளியாக்குகிறவனுமாகிய இவ்விருவரும் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்.**

**- நீதிமொழிகள் 17:15**

தேவனுக்கு பிரியமில்லாதவற்றைச் செய்தவர்களை நல்லவர்கள் என்றும், குற்றவாளியல்ல என்றும் நியாயப்படுத்தக்கூடாது. தவறு செய்யாதவர்களை குற்றவாளி என்று தீர்ப்பு சொல்லக்கூடாது. குற்றவாளிகளுக்குரிய தண்டனையைக் கொடுக்காமல், அவர்களை விடுவித்து, குற்றம் செய்யாதவர்களுக்கு குற்றம் செய்ததற்கான தண்டனையை கொடுப்பது தவறு. இப்படிப்பட்ட காரியங்களை கர்த்தர் அருவருக்கிறார். இந்த உலகத்தில் தீய காரியங்களை செய்பவர்களை நல்லவர்கள் என்றும், நல்ல காரியங்களை செய்பவர்களை கெட்டவர்கள் என்று கூறுவதையும், தீர்ப்பு செய்வதையும் நாம் கண்கூடாக காணலாம். தேவனுடைய பார்வையில் இவை அருவருப்பானவை. இப்படிப்பட்டவர்களுக்கு (அவனவனுக்கு) கிரியைக்கேற்ற பலனைத் தண்டனையைத் தருவார். தேவனே நியாயாதிபதி குற்றம் செய்தவனுக்கு மாத்திரமல்ல, அநீதியாய் நியாயம் தீர்த்தவனுக்கும் கர்த்தர் தண்டனை தருவார். எனக்கு பிரியமானவர்களே, உங்களுக்கு யாரேனும் அநீதி செய்து கொண்டிருப்பார்களேயானால், கவலைப்படாதிருங்கள். கர்த்தர் நீதி செய்வார்.

இன்றைக்கு அநேகர் அதிகாரம் தங்கள் கையில் இருப்பதினாலும், வயதில் மூத்தவர்களாயிருப்பதினாலும், தங்கள் இஷ்டம்போல நியாயஞ்செய்து கொண்டிருக்கிறார்கள். தங்களை இப்படிப்பட்ட ஸ்தானத்தில் வைத்தவரான தங்களை உண்டாக்கினவரை மறந்து போயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அநீதியின் சூழ்நிலையில் நீங்கள் இருப்பீர்களானால் பயப்படாதிருங்கள். உங்கள் தேவன், நீதியின் தேவன். அவர் அநீதி செய்கிறவரல்ல. நீங்கள் படும் வேதனைகளைக் கண்டு மனமிரங்குவார். சேனைகளின் கர்த்தர் உங்களுக்காக யுத்தம் செய்வார். உங்களுக்கு நீதி கிடைக்கப் பண்ணுவார். அநீதி செய்த மனுஷர்கள் உங்கள் கண் எதிரிலேயே கர்த்தர் தங்களுக்கு கொடுத்த எல்லாவற்றையும் இழந்துபோய் வீழ்ச்சியடைவதை காண்பீர்கள். உங்களது நீதியும், ஜெயமும் கர்த்தருடைய கரத்திலிருக்கிறது. எந்த மனுஷனைக் கண்டும் பயப்படாதிருங்கள். சகல அதிகாரமும், வல்லமையும், நீதியும் ஜெயமும் கர்த்தருடையது.

மற்றவர்களை குற்றவாளி என்று நாம் கூறும்போது, எச்சரிக்கையாயிருக்க வேண்டும். யார் மேலும் வீணாக பழிசுமத்தக் கூடாது. குற்றமற்றவர்கள் மேல் வீணாக பழிசுமத்தும்போது, தேவனிடமிருந்து தண்டனை வரும். யாருக்கும் ஒரு தீமையும் செய்யக்கூடாது. சிலர் தாங்கள் செய்த குற்றத்தை மறைப்பதற்காக பணத்தை கொடுத்து தங்களுக்கேற்றபடி தீர்ப்பு சொல்ல வைப்பார்கள். ஆனால், இறுதியில் நீதியுள்ள நியாயாதிபதியாகிய தேவனுடைய நியாய தீர்ப்புக்கு அவர்கள் தப்பவே முடியாது (நீதிமொழிகள் *10:2*). தேவனுக்கு மறைவானது ஒன்றுமில்லை. அநியாயம் செய்கிறவன் தான் செய்த அநியாயத்திற்கேற்ற பலனை அடைவான். பட்சபாதமேயில்லை (கொலோசெயர் *3:25*). தவறு செய்த அநேகர், இவ்வுலக சட்டத்தின் தண்டனையிலிருந்து தன்னை விடுவித்து கொள்ளலாம். ஆனால், ஒருநாள் தேவனிடம் தாங்கள் செய்த தவற்றிற்கு கணக்கு ஒப்புவிக்க

வேண்டும். ஒருவரும் தண்டனைக்கு தப்ப முடியாது.

மற்றவர்கள் நமக்குரியதை எடுத்துக் கொள்ளாமலும், திருடாமலும் இருக்கும்போது, நாம் மற்றவர்களுக்குரிய பணத்தையோ, பொருட்களையோ எடுத்து, அவர்களை கொள்ளையிட்டு அவர்களுக்கு துரோகம் செய்தால், நம்முடையது கொள்ளை போகும், நமக்கு துரோகம் நேரிடும் (ஏசாயா *33:1*). மற்றவர்கள் நமக்கு ஒரு தீமையும் செய்யாதிருக்கும்போது, நாம் மற்றவர்களுக்கு தீமை செய்து, அவர்களிடம் நயவஞ்சகமாக நடந்து கொண்டால், நாமும் மற்றவர்களால் ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்படுவோம். இப்படி நாம் மற்றவர்களை ஏமாற்றி, வஞ்சித்து,மற்றவர்களுக்கு துரோகம் செய்வதால் பல சிக்கல்களில் மாட்டிக்கொள்வோம். நம் வாழ்க்கையில் வேதனையும், துன்பங்களும் மிகுந்த துயரங்களும், நிம்மதியின்மையும் வரும். நம்முடைய சந்ததிகள் கூட பாதிக்கப்படும். நாம் சுயநலமுள்ளவர்களாக மாறும்போதுதான் கஷ்டங்கள் நம் வாழ்க்கையில் வரும். சுயநலமுள்ளவர்கள் தங்களின் உரிமையை பெரிதாகப் பேசி, மற்றவர்களுக்குரியதை அபகரிக்கிறார்கள். மற்றவர்களின் நலனை, தேவைகளை கருத்தில் கொள்ளாது, எப்பொழுதும் தங்களையும், தங்களது தேவைகளைப் பற்றியும் யோசிப்பார்கள். மற்றவர்கள் கஷ்டப்பட்டாலும் அதைக்குறித்து கவலைப்படமாட்டார்கள். தாங்கள் மாத்திரம் நன்றாயிருக்க வேண்டும் என்பதிலேயே குறியாயிருப்பார்கள்.

ஏழை மனிதனுக்கு நாம் அநியாயம் செய்யக்கூடாது. அவன் ஏழையாய் இருக்கிறான் என்று அவன் நியாயத்தை புரட்டக்கூடாது. அவனும் மற்றவர்களைப் போல நியாயந்தீர்க்கப்பட வேண்டும் (யாத்திராகமம் *23:6*). யோசியா ராஜாவைக் குறித்து கர்த்தர் இப்படியாகச் சொல்லுகிறார்:

**அவன் சிறுமையும் எளிமையுமானவனுடைய நியாயத்தை விசாரித்தான்; அப்பொழுது சுகமாய் வாழ்ந்தான்; அப்படிச் செய்வதல்லவோ என்னை அறிகிற அறிவு என்று கர்த்தர் சொல்லுகிறார்.**

**- எரேமியா 22:16**

பிரியமானவர்களே, நீங்கள் இயேசுகிறிஸ்துவைக் குறித்து சரியாக அறிந்து கொள்வதன் அடையாளம், நீங்கள் ஏழை, எளிய ஜனங்களுக்கு நீதி செய்வதே. ஏழையாய் இருக்கிறார்கள் என்று ஏழையை துச்சமாக நடத்தாதிருங்கள். மனமேட்டிமை கொள்ளாதிருங்கள். நமக்கிருக்கும் வசதி வாய்ப்புகள் எல்லாம் கர்த்தர் நமக்கு கொடுத்தது. கர்த்தர் தந்த ஆசீர்வாதங்களை வைத்துக்கொண்டு மற்றவர்களை அற்பமாய் நடத்தும்போது, கர்த்தர் அந்த வசதி வாய்ப்புகளை எடுத்துப்போடுவார். நமக்கு கொடுத்திருக்கிற உயர்வைக் கொண்டு மற்றவர்களுக்கு உதவவேண்டும். அப்படி ஏழை, எளிய ஜனங்களுக்கு உதவி செய்யும்போது கர்த்தர் உங்களை மென்மேலும் ஆசீர்வதிப்பார். பரலோகத்திலும் அதற்கான பலனை கர்த்தர் வைத்திருக்கிறார்.

## தேவனே நீதியுள்ளவர்

**வெவ்வேறான நிறைகற்கள் கர்த்தருக்கு அருவருப் பானவைகள்; கள்ளத் தராசு நல்லதல்ல.**

**- நீதிமொழிகள் 20:23**



ஜனங்களை ஏமாற்றும் நோக்கத்துடன், கூடுதலான, குறைவான எடைக் கற்களை வியாபார ஸ்தலத்திலேயோ, நம் வீட்டிலேயோ வைத்திருக்கக்கூடாது என்றும் சரியான அளவை காண்பிக்கக்கூடிய எடை பார்க்கும் கருவியை வைத்திருக்க வேண்டும் என்றும் கர்த்தர் கூறுகிறார். ஏமாற்றும் நோக்கத்துடன் தவறான எடைக் கற்களையும் எடைக் கருவிகளையும் பயன்படுத்துகிறவர்களைக் கர்த்தர் வெறுக்கிறார் (உபாகமம் *25:13-16*). சரியான எடையும், சரியான அளவும் வைத்திருக்க வேண்டும் என்று கூறப்படுவது, வெறும் எடைபோடும் காரியம் மாத்திரமல்ல. மற்ற மனிதர்களுடன் நாம் எப்படி நியாயமாய் நடக்கவேண்டும் என்பதும் அடங்கியுள்ளது. நாம், மற்றவர்களை ஏமாற்றாமல் இருக்க வேண்டும்.

வியாபாரம் செய்பவர்கள், தங்களுக்கு அதிக வருமானம் வருவதற்காக, பொருட்களை தராசில் நிறுத்து கொடுக்கும்போது, சரியான எடைக் கற்களை பயன்படுத்தாமலும், சாமான்களின் அளவை குறைத்தும், தரம் குறைந்த பொருட்களை விற்றும் லாபத்தை அதிகமாக சம்பாதித்தாலும் அதனோடுகூட அவர்களுடைய வாழ்க்கையில் வேதனையையும் சம்பாதிக்கிறார்கள். நிம்மதியை இழந்துபோய் திருப்தியில்லாமல் இருக்கிறார்கள். அநியாயமாய் வந்த அதிக வருமானத்திலும், நியாயமாய் வந்த கொஞ்ச வருமானமே உத்தமம் (நீதிமொழிகள் *16:8*).

நியாயமாக இருப்பவர்களுக்கு செல்வத்தோடுகூட தேவனுடைய ஆசீர்வாதமும் வந்து சேரும். நியாயமான வழியில் வரும் வருமானத்தையே நாம் விரும்ப வேண்டும். கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும். அதனோடேகூட அவர் வேதனையைக் கூட்டார் (நீதிமொழிகள் *10:22*). தவறான வழியில் பணத்தை சேர்க்கிறவர்கள், அநியாயம் செய்ய விரும்பி, தங்களைத் தாங்களே உயர்வாகப் பேசுவார்கள் (ஓசியா *12:7,8*). ஏமாற்றுக்காரர்கள், யாரும் தனது குற்றங்களைக் கண்டுபிடிக்க முடியாது என்று எண்ணிக் கொண்டு மற்றவர்களை ஏமாற்றிக் கொண்டிருப்பார்கள். பொய்யானதொன்றை உண்மையென்று சொல்லி மற்றவர்களை நம்பச் செய்வார்கள். மற்றவர்களை ஏமாற்றி, நேர்மையற்ற முறையில் நடந்து மற்றவர்களுக்குரிய சுதந்திரத்தையும், உரிமையையும் கொடுக்காமல், அவர்களை இரக்கமற்ற முறையில் நடத்தி, அவர்களை அடக்கி ஆளுவதையும், மற்றவர்களுக்குரியதை வஞ்சித்து எடுப்பதையும் கர்த்தர் அருவருக்கிறார். நாம் இயேசு கிறிஸ்துவைப் போல் நீதியும், நியாயமுள்ளவர்களாகவும், உண்மையுள்ளவர்களாகவும் நடக்கவேண்டும்.

**எப்படியென்றால், அவர்கள் தேவநீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தித் தேடுகிறபடியால் தேவநீதிக்கு கீழ்ப்படியாதிருக்கிறார்கள்.**

**- ரோமர் 10:3**

அநேகர் நல்ல காரியங்களையும், நற்செயல்களையும் செய்வதினாலும், நியாயப்பிரமாணத்தின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதினாலும் தாங்கள் நீதியுள்ளவர்கள் என்று நம்பிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதினாலும், குற்றம் கண்டுபிடிக்க முடியாத வாழ்க்கை வாழ்வதினாலும், அவர்கள் சரியாகத்தான் இருக்கிறார்கள் என்று நம்புகிறார்கள். இவர்கள்தான் சுயநீதியையுடையவர்கள். சுயநீதி அழுக்கான கந்தையைப்போல இருக்கிறது (ஏசாயா *64:6*). இப்படி அவர்கள் செய்வதினால் நீதிமான்களாக்கப்படுவதில்லை. இயேசுகிறிஸ்துவின் இரத்தம்தான் அவர்களை நீதிமான்களாக்கும்.

விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் (ரோமர் *1:17*) என்ற வார்த்தையின்படி, இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பதால் தேவனுடைய நீதியை நாம் பெற்றுக் கொள்கிறோம். இயேசுகிறிஸ்து எனக்காக மரித்தார். அவருடைய இரத்தத்தினால் பாவங்கள் கழுவப்பட்டு மன்னிப்பைப் பெற்று பரிசுத்தமாகி விடுகிறோம் (*1* யோவான் *1:7,9*) என்பதை விசுவாசிப்பதாகும். நீதி என்பது, பாவமே செய்யாமல் இருந்ததை குறிக்காமல், தேவனுடைய பார்வையில் சரியாக இருத்தல். விசுவாசிக்கிற யாவரும் தேவ நீதியை பெற்றுக் கொள்கிறார்கள். (ரோமர் *3:21-24*).

## பெருமை

**மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்; கையோடே கைகோத்தாலும் அவன் தண்டனைக்குத் தப்பான்.**

**- நீதிமொழிகள் 16:5**

பெருமையுள்ளவர்கள் தங்களை தாங்களே உயர்வாக எண்ணிக்கொண்டு மற்றவர்களை குறைவாக மதிப்பிடுவர். மற்றவர்களை விட தாங்கள் சிறந்தவர்கள் என்று நினைப்பார்கள். தாங்கள் நினைப்பதே சரியானது என்று நினைத்து மற்றவர்கள் என்ன சொன்னாலும் கேட்கமாட்டார்கள். ஏனென்றால் தங்களிடம் பேசுபவர்களை அசட்டை பண்ணுவதனிமித்தமே. பேசுபவர்கள் யாராயிருந்தாலும், அவர்கள் எப்பேர்ப்பட்ட உயர்வான காரியத்தை சொன்னாலும் அவர்களை அசட்டை பண்ணிவிடுவார்கள். மற்றவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்றே நினைப்பார்கள்.

நமக்குள்ள ஆசீர்வாதங்கள், நன்மைகள், செல்வாக்கு, வேலைகள், பணம், பொருட்கள், தாலந்துகள், ஞானம், பிள்ளைகள் எல்லாம் நம்மால் உண்டானதல்ல, கர்த்தர் நமக்கு கொடுத்தவை என்பதை உணர்ந்து கொண்டோமானால் தாழ்மையோடு இருப்போம். இயேசு கிறிஸ்து தேவனுக்கு சமமாயிருந்தும், மனுஷனாய் இந்த உலகத்திற்கு வந்து அடிமையைப் போல தன்னை தாழ்த்தினார். அவரது மரணம் வரைக்கும் தேவனுக்கு முன்பாக கீழ்ப்படிந்திருந்தார். அதனால் தேவன் அவரை உயர்த்தினார். இயேசு என்னும் நாமத்தினால் நாம் பரலோகத்திலுள்ள, பூமிக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளலாம். மேன்மைக்கு முன்னானது தாழ்மை (நீதிமொழிகள் *15:33*).

லூசிபர் (சாத்தான்) தன் அழகினாலும் ஞானத்தினாலும், திறமையினாலும் கர்வம் கொண்டான். அவன் தேவனைப் போலாக வேண்டும் என்றும், அவனை யாவரும் வணங்க வேண்டும் என்றும், தேவனுடைய ஸ்தானத்தில் அவன் வரவேண்டும் என்றும் நினைத்தான். ஆனால், தேவன் அவனை கீழே தள்ளிவிட்டார். இன்னும் அந்த தள்ளப்பட்ட லூசிபர் அநேக ஜனங்களை தன்னைப் போல மனமேட்டிமை கொள்ள வைக்கிறான். அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை (நீதிமொழிகள் *16:18*).

ராஜாவாகிய நெபுகாத்நேச்சாரை கர்த்தர் உயர்த்தினபோது. மனமேட்டிமை கொண்டான். எல்லாம் தன்னுடைய பராக்கிரமம் என்று பெருமை கொண்டான். கர்த்தர் அவனை ஒரு மிருகத்தைப் போலாக்கி, புல்லைத் தின்ன வைத்தார். அப்போது அவன் தன் நிலையை உணர்ந்து தன்னை தாழ்த்தினான். அப்படி தாழ்த்தினபொழுது கர்த்தர் அவனை மீண்டுமாக உயர்த்தினார்.

இனி அகம்பாவத்தோடும், தற்பெருமை யோடும் பேசாதிருங்கள்;





ஏனென்றால் தேவனாகிய கர்த்தர் எல்லாவற்றையும் அறிவார். நம்முடைய செய்கைகள் அவராலே நியாயந்தீர்க்கப்படும் (*1* சாமுவேல் *2:3*). பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ மிகுந்த கிருபையளிக்கிறார். பெருமையையும், அகந்தையையும் நம்மை விட்டு அகற்றி, எந்த சூழ்நிலையிலும் தாழ்மையோடு கூட நடந்து கொள்ள வேண்டும். மனமேட்டிமை, பெருமை நம்மிடமிருந்தால், தேவனிடத்தில் மன்னிப்பைக் கேட்டு அதிலிருந்து விடுதலை பெறுவோம்.

மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன். சிலர் கர்த்தர் தங்களுக்குக் கொடுத்த ஆசீர்வாதங்களைக் குறித்தே பெருமைபாராட்டிக் கொண்டிருப்பார்கள். நாட்கள் செல்ல செல்ல கர்த்தரை விட்டு விட்டு ஆசீர்வாதங்களை மட்டுமே பெருமை பாராட்டிக் கொண்டிருப்பார்கள். தங்கள் கண் எதிரே மற்றவர்களை கர்த்தர் ஆசீர்வதிப்பதை காணாதிருக்கிற குருடராயிருப்பார்கள். கர்த்தர் தங்களை ஆசீர்வதிப்பதற்காக நன்றி சொல்ல மறந்து போவார்கள். தங்களிடமிருக்கும் பணத்தையும், சொத்தையும், வசதிபடைத்த உறவினர்களையும் நம்பி பணத்தை பெருக்க முற்படுவார்கள். அந்தோ பரிதாபம், இவர்கள் கர்த்தரை விட்டுவிட்டதால் கர்த்தரும் இவர்களை விட்டுவிடுவார். கர்த்தரை தேடுகிறவர்களுக்கு பலன் கிடைக்கும். நாம் விதைத்தாலும், நீர்ப்பாய்ச்சினாலும் நம்மால் விளைச்சலை உண்டாக்க முடியாது. கர்த்தர்தான் எல்லாமே. நாம் விதைக்கும்போது (முயற்சியை) நல்ல சூழ்நிலைகளை (வாய்ப்புகளை) உண்டாக்கி முன்மாரியும், பின்மாரியான மழையை (மற்றவர்களுடைய தயவு, உதவி) கொடுத்து அதன் பலனை தருவது கர்த்தரே. அவராலேயன்றி நாம் ஒன்றும் செய்ய முடியாது.

மிக ஏழ்மையான நிலைமையில் இருப்பவர்கள் சற்று உயர்வு வந்தவுடன் மற்ற மனுஷர்களை அற்பமாக நடத்த ஆரம்பிப்பார்கள். எப்போதும் தங்களுக்குள்ள வசதியைக் குறித்தே பெருமைப்பாராட்டிக் கொண்டிருப்பார்கள். மற்றவர்களிடத்தில் இல்லாததையும் தங்களிடத்தில் உள்ளதையும் இணைத்து பேசி தங்களை தாங்களே உயர்த்தி பேசுவார்கள். மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தராலேதான் இந்த உயர்வு கிடைத்தது என்று கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்ட வேண்டும்.

ஒரு குடும்பத்தில் ஒரு சகோதரி, உலகத்தில் நடக்கும் எல்லா காரியங்களையும் அறிந்து வைத்திருப்பார்கள். அதனால் பெருமையோடு இருப்பார்கள். மற்ற எல்லோரையும் அப்படி அவர்களைப்போல அறிந்து வைக்காததினிமித்தம் குறை சொல்லுவார்கள். அசட்டையும் செய்வார்கள். அந்த உலக நடப்பைப் பற்றி அறிகிற அறிவு மற்றவர்களுக்கு அவசியம் இல்லை என்பதை அந்த சகோதரி அறியாதிருந்தார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் உலக அறிவு கர்த்தரைப் பற்றி அறிகிற அறிவுக்கு முன்பாக நஷ்டம், குப்பை என்று சொல்லுகிறான் (பிலிப்பியர் *3:7,8,11*).

# பொய்

**பொய் உதடுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்; உண்மையாய் நடக்கிறவனோ அவருக்குப் பிரியம்.**

**- நீதிமொழிகள் 12:22**

உண்மையை மறைப்பதே பொய். ஒருவருக்கொருவர் பொய் பேசும்போது அன்பையும், ஒற்றுமையையும் இழந்து போவோம். பொய் பேசும்போது சண்டையும், விவாதமும் உண்டாகிறது; மற்றவர்கள் நம்மீது வைத்துள்ள நம்பிக்கையை இழந்துபோவோம். உறவு முறைகள் முறிந்துபோகும். மற்றவர்களை உண்மையாய் நேசித்தோமானால், பொய் சொல்லமாட்டோம். கர்த்தருக்கும், மற்றவர்களுக்கும், மனசாட்சிக்கும் முன்பாக உண்மையாக இருக்கவேண்டும் என்று நினைப்பவர்கள் பொய்பேசமாட்டார்கள். கர்த்தர் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று கர்த்தரைக் குறித்த பயஉணர்வு இல்லாததால் துணிந்து பொய் பேசுகிறார்கள். பிசாசானவன் உண்மைக்கு எதிராக இருக்கிறான். அவன் ஒரு பொய்யன், பொய்க்கு பிதாவுமாயிருக்கிறான். ஒருவன் சிந்திக்கிற எண்ணங்களையும், நடந்து கொள்ளும் முறையையும் வைத்தே பொய்க்கு பிதாவாகிய சாத்தானை பின்பற்றுகிறார்களா அல்லது உண்மையுள்ள தேவனை பின்பற்றுகிறார்களா என்பதை அறிந்து கொள்ளலாம். நாம் பொய் பேசுவதை விட்டு எப்பொழுதும் உண்மையே பேசவேண்டும் (எபேசியர் *4:25*).



தேவமனிதனாகிய எலிசாவின் வேலைக்கார னாகிய கேயாசி, சீரிய தேசபடைத்தலைவனாகிய நாகமான் எலிசாவுக்கு கொடுத்த வெகுமதியை வாங்க பொய் சொன்னான். அவன் நாகமானின் பின்னே ஓடி, அவன் கையில் ஏதாகிலும் வாங்குவேன் என்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணினான். எலிசாவோ அந்த வெகுமதிகளை வாங்க மறுத்து விட்டான். கேயாசியோ, நாகமானைப் பின் தொடர்ந்து, தன் எஜமான் தன்னை அனுப்பினதாக அவனிடம் பொய் சொல்லி, வெகுமதிகளில் சிலதை வாங்கினான். தீமையான காரியத்தை செய்ய அவனது மனது திட்டமிட்டது. தீங்கு செய்வதற்கு அவன் கால்கள் விரைந்தோடியது. பாருங்கள் பொய் சொன்னதன் விளைவு, குஷ்டரோகம் அவனுக்கும் அவன் சந்ததிக்கும் வந்தது.

பொய் பேசுவதை கர்த்தர் வெறுக்கிறார். நாம் உண்மையாய் நடக்கும்போது அவருடைய உள்ளம் மகிழ்ச்சியடைகிறது. நாம் பொய் பேசி நியாயத்தை புரட்டியிருந்தால், கர்த்தரிடத்தில் மன்னிப்பைப் பெற்றுக் கொள்வோம். அப்பொழுது தேவ கோபத்திலிருந்து விடுவிக்கப்படுவோம்.

ஆறுகாரியங்களை கர்த்தர் வெறுக்கிறார். ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள். மேட்டிமையான கண்கள், பொய்களைக் கூறும் நாவுகள், அப்பாவி ஜனங்களைக் கொல்லும் கைகள், தீமையானவற்றைச் செய்ய திட்டமிடும் மனது, கெட்டவற்றை செய்ய ஓடும் கால்கள், பொய்யை சொல்லுவது, உண்மையில்லாதவற்றைக் கூறுவது, விவாதங்களை தொடங்கி



வைத்து அடுத்தவர்களுக்குள் சண்டையை மூட்டுவது (நீதிமொழிகள் *6:16-19*).

கர்த்தருக்கு பயப்படும் பயம் இல்லாதவர்கள், நல்லவர்களைக் குறித்து, அவர்களுக்கு விரோதமாய் தீமையானவற்றையும், பொய்யையும் பேசுவார்கள். மற்றவர்களை எப்போதும் குறைகூறி, குற்றம் கண்டு பிடிப்பார்கள். ஆனால், அவர்கள் தாங்கள் செய்ய விரும்பும் தீயகாரியங்களை எப்பொழுதும் செய்து கொண்டிருப்பார்கள். பொல்லாதவற்றை செய்ய திட்டமிட்டு சண்டைபோட கூட்டங்கூடுவார்கள். மற்றவர்களை எப்பொழுதும் சபிப்பார்கள் (ரோமர் *3:13-18*).

கர்த்தருக்கு பயப்படும் பயம் வரும்போது, கர்த்தர் வெறுக்கும் காரியங்களை நாமும் வெறுப்போம்.

தேவன் நம்மை வெறுக்காதபடி, அவருக்கு பிரியமான ஒரு வாழ்க்கையை நாம் வாழ வேண்டும். தேவன் வெறுக்கும் பாவங்கள் நம்மிடம் இருந்தால், நாம் மனந்திரும்பி பாவமன்னிப்பை பெற்றுக் கொள்ள வேண்டும். எவ்வளவு பெரிய பாவத்தையும் தேவன் மன்னிப்பார். உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும், உறைந்த மழையைப்போல வெண்மையாக மாற்றுவார் நம் தேவன் (ஏசாயா *1:18*). அவரிடம் வருவோரை ஒருபோதும் புறம்பே தள்ளமாட்டார். மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கி விடுவார். தேவன் நம்மிடம் அன்போடு, பொறுமையோடு நாம் அவரண்டை திரும்பிவர காத்திருக்கிறார். நாம் அவரது நல்நோக்கத்தை அறிந்து கொள்ளாமல் நம் மனது விரும்பியபடியே வாழ்ந்து வந்தோம். நம் இருதயத்தை கடினமாக்கி தேவனுடைய பிள்ளைகளாக மாற மறுக்கிறோம். அதனால் தேவகோபம் நம்மேல் வருவதால் நமக்குரிய தண்டனையும் அதிகமாகிக் கொண்டே போகும். ஒவ்வொரு மனிதனும் தான் செய்த செயல்களுக்கேற்றபடி நற்பலனோ, தண்டனையோ பெறுவார்கள்.

இன்றே நாம் நம்மை உண்மையாய் நேசிக்கிற கர்த்தரிடம் திரும்புவோம். அவருக்குப் பிரியமான வாழ்க்கையை வாழ்வோம். இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்களோடிருப்பதாக!

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்தப் பத்திரிகை வேண்டுவோர் சந்தா அனுப்பி பெற்றுக் கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| **உள்நாட்டு வருட சந்தா** | **ரூ.** | **200/-** |
| **வெளிநாட்டு வருட சந்தா** | **ரூ.** | **2000/-** |

**S.PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு DD/M.O / Cheque மூலம் அனுப்பவும். உங்களது முழு முகவரியையும் எழுதுங்கள். **ICICI** வங்கி வாயிலாகவும் நீங்கள் அனுப்பலாம்.

**ICICI வங்கி கணக்கின் பெயர் : S.PAULRAJ KENNEDY**

**ICICI வங்கி கணக்கு எண் : 0350 0150 7744**

**எங்களது முகவரி :** எஸ்.பால்ராஜ் கென்னடி, ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை, சென்னை - 600 015. தமிழ்நாடு, இந்தியா

**உங்களது ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும்**

**+91 - 99406 67881, +91 - 44 - 22353500**

**E-mail : nijakennedy@yahoo.com**

இணைய தளம் : **www.kennedyministries.org**




- மற்றவர்களைப்போல நீங்கள் இருக்க விரும்பும்பொழுது எவ்வளவு சிறப்பாக நீங்கள் காரியங்களைச் செய்தாலும் இரண்டாவது ஸ்தானத்திலேயே இருப்பீர்கள். மற்றவர்களைப் பார்ப்பதை விட்டுவிட்டு, ஆண்டவரை நோக்கிப் பாருங்கள். மற்ற ஜனங்கள் உங்களை புறக்கணிப்பார்கள். ஆனால், ஆண்டவர் உங்களை எப்பொழுதுமே சரியான பாதையில் ஓடச் செய்வார். கர்த்தருக்குப் பிரியமான பாத்திரமாக இருக்க விரும்புவீர்களென்றால் அவர் உங்களுக்குக் கொடுத்த தாலந்துகளை, வரங்களை பயன்படுத்துங்கள். உங்களுக்காகக் கர்த்தர் வைத்திருக்கும் வாழ்க்கையை முழுமையாக வாழுங்கள்.

- உங்களது எதிர்காலம், இன்று உங்கள் வாழ்க்கையை எப்படி வாழ்கின்றீர்கள் என்பதிலேயே மறைந்துள்ளது. எந்த வேலையையும் தாமதமாக செய்யாதீர்கள். உங்களது ஆற்றல், உங்களது ஆர்வத்திலேயே உள்ளது. ஒவ்வொரு நாளையும் உற்சாகத்தோடு ஆரம்பியுங்கள்.

- எதிர்காலத்தில் நீங்கள் எப்படியாக இருக்க விரும்புகிறீர்கள் என்பது அதுவாக வாய்ப்பதில்லை, அது நீங்கள் தெரிந்தெடுப்பதுதான். நீங்கள் எப்படியாக இருக்க விரும்புகிறீர்கள் என்பதைக்குறித்து இன்று முடிவு எடுங்கள். அப்படி முடிவு எடுத்துவிட்டீர்களென்றால் உங்களது வாழ்க்கையில் முக்கியமான தீர்மானத்தை எடுத்துவிட்டீர்கள் என்று அர்த்தம். இப்பொழுது நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், அந்த இலக்கை அடைய நீங்கள் என்னென்ன செய்யவேண்டும் என்பதை திட்டமிடுவதுதான். உங்களது தீர்மானத்தையும் திட்டங்களையும் கர்த்தரிடத்தில் ஒப்புவித்து ஜெபியுங்கள். அவர், உங்கள் காரியங்களை வாய்க்கப் பண்ணுவார். இன்று நீங்கள் இருக்கும் நிலை, கடந்த காலத்தில் நீங்கள் எடுத்த தீர்மானத்தின் விளைவே.

- உங்கள் கனவுகள் நிறைவேறக் காத்திருங்கள். அவசரப்படாதீர்கள். பொறுமையோடு காத்திருந்தால் வெற்றி நிச்சயம். அநேக திறமைசாலிகளுக்கு தோல்விகள் ஏற்படுவது அவர்களது அவசரத்தன்மையால்தான். எல்லாவற்றுக்கும் ஒரு காலத்தை கர்த்தர் நிர்ணயித்திருக்கிறார். நல்ல முடிவுக்குக் காத்திருங்கள்.

- நீங்கள் எவ்வளவு பணம், பொருள், திறமையைக் கொண்டு ஒரு காரியத்தை



**“ உங்களது எதிர்காலம், இன்று உங்கள் வாழ்க்கையை எப்படி வாழ்கின்றீர்கள் என்பதிலேயே மறைந்துள்ளது ”**

செய்யத் தொடங்குகிறீர்கள் என்று பார்க்காதீர்கள். எவ்வளவு உறுதியான மனதோடு தீர்மானத்தோடு செய்யத் தொடங்குகிறீர்கள் என்பதையே பாருங்கள். நீங்கள் என்ன வைத்திருக்கிறீர்கள் என்பதைவிட, எப்படி அவைகளைக் கொண்டு செய்ய போகின்றீர்கள் என்பதே முக்கியம்.

- நமக்காக நாம் என்ன செய்தோமோ அது நம்மோடு மடிந்துவிடும். ஆனால், மற்றவர்களுக்காக நாம் என்னசெய்கிறோமோ அது என்றென்றும் இருக்கும். சுயநலக்காரர்தான் மிகவும் ஏமாற்றப்பட்டவனாக இருப்பான்.மற்றவர்கள் வெற்றி பெறுவதற்கு உதவி செய்யுங்கள். மற்றவர்களைப் பாராட்டுங்கள். மற்றவர்களை நீங்கள் எப்படி பார்க்கிறீர்களோ, அப்படித்தான் மற்றவர்கள் உங்களை பார்ப்பார்கள். உங்களை உற்சாகப்படுத்துவதற்கு சிறந்த வழி, மற்றவர்களை நீங்கள் உற்சாகப்படுத்துவதே.

- ஒவ்வொரு மனிதனும் எதையாவது ஒன்றை விரும்புகிறவனாக இருப்பான். எல்லோருமே எதையாவது விரும்புவார்கள். நாம் எதை விரும்புகிறோமோ அதினாலேயே உந்தப்படுகிறோம். அதுவே நம் வாஞ்சையை, தாகத்தை வெளிப்படுத்துகிறது.அந்த தாகந்தான் நீங்கள் எப்படியாக இருக்க விரும்புகிறீர்கள் என்பதைக் காட்டுகிறது. கண்கள் அநேகக் காரியங்களைப் பார்க்கலாம். ஆனால், சில காரியங்களையே இருதயத்திற்கு பிடிக்கும். அதைத் தொடர்ந்து ஆர்வத்தோடு செய்யுங்கள். உங்கள் வாழ்க்கையில் வெற்றி உறுதி .

- நம்மை குறித்து நாமே, இப்படிப்பட்டவன் நான், இப்படிப்பட்டவள் நான் என்று தீர்மானிப்பதே அநேகக் காரியங்களை நாம் செய்ய விடாமல் தடுக்கிறது. நீங்கள் எங்கே இருக்கின்றீர்கள் என்று பார்ப்பதை விட்டுவிட்டு, என்னவாக இருக்க விரும்புகின்றீர்கள் என்பதைப் பாருங்கள். உங்கள் மனது எதைச் சுற்றி சுற்றி வருகிறது என்பதில் கவனமாக இருங்கள். ஏனென்றால், உங்களது வார்த்தைகளும், செய்கைகளும் அதையே தொடரும். உங்கள் மனதில் நீங்கள் என்னவாக இருக்கிறீர்களோ அதையே செய்வீர்கள்.

- உங்களது வாழ்க்கையில் நீங்கள் மிக வேகமாக முன்னேறவில்லை என்று உற்சாகம் இழந்துவிடாதிருங்கள். சிறு சிறு காரியங்களை எப்படி செய்கிறீர்களோ, அப்படித்தான் பெரிய காரியங்களையும் செய்யப்போகின்றீர்கள்.

- மற்றவர்களுக்கும், உங்களுக்கும் இடையே ஒரு வித்தியாசம் இருக்க வேண்டும். உங்களுக்கென்று தனித்துவம் இருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் இன்றே உங்களை மறு பரிசீலனை செய்து, மாற்றம் பெறுங்கள். அதற்கான ஒரு வழி, மற்றவர்கள் சாதாரணமாக செய்யும் காரியங்களையும் நீங்கள் உற்சாகத்தோடும், ஆர்வத்தோடும் செய்யுங்கள்.




**நா**ம் ஒரு விக்கிரகத்தை வழிபடாமல் ஜீவனுள்ள தேவனை வழிபடுகிறோம். கண்களை உண்டாக்கினவர் - காண்கிற தேவன்.காதுகளை உண்டாக்கின தேவன் - கேட்கிற தேவன். எப்பொழுது நாம் ஜெபித்தாலும் நம் ஜெபத்தை கர்த்தர் கேட்டுக் கொண்டிருக்கிறார் என்ற உறுதியோடு ஜெபிக்க வேண்டும். ஜெபத்திலே நமக்கு முதலாவது நம்பிக்கை வேண்டும். என்னுடைய ஜெபத்தை கர்த்தர் கேட்கிறாரோ? இல்லையோ? என்று சந்தேகத்தோடு ஜெபிக்கக்கூடாது (யாக்கோபு *1:6*).

ஜெபம் என்பது வெறுமனே நாம் கர்த்தரிடம் நம் தேவைகளைச் சொல்லுவதுமாத்திரம் கிடையாது. ஜெபம் என்பது கர்த்தரோடு நாம் முகமுகமாய் பேசுகிற நேரம். நாம் அவரோடும், அவர் நம்மோடும் பேசுகிற நேரம். மோசேயோடு பேசின தேவன், உங்களோடும் பேசுவார்.

ஜெபத்திலே முதலாவது, நம் பாவங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்பட மன்றாட வேண்டும். ஏனென்றால், பாவம், நம் ஜெபத்திற்குத் தடையாகும். ஏசாயா தீர்க்கதரிசி சொல்லுகிறான்: உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது (ஏசாயா *59:2*).

பின்னர், கர்த்தரைப் பாடி துதிக்க வேண்டும். துதிகளுக்குள் வாசமாயிருக்கிற கர்த்தர் (சங்கீதம் *22:3*). இப்போதும், இதை எழுதும் நேரத்திலும் பரலோகத்தில் கேராபீன்களும், சேராபீன்களும், சகல பரிசுத்தவான்களும் கர்த்தரைத் துதித்துப் பாடிக் கொண்டிருக்க, அந்த துதிகளின் மத்தியில் ராஜாதி ராஜாவாய், கர்த்தாதி கர்த்தனாய் நம் தேவன் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். பரலோகத்தில் எப்பொழுதும் துதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அநேகர், எனக்கு ஜெபிக்கவே முடியவில்லை என்பார்கள். எடுத்த உடனே



**“ எடுத்த உடனே வார்த்தைகளைச் சொல்லி ஜெபிக்க முற்படாதீர்கள். உங்களுக்குப் பிடித்த மானப் பாடலைப் பாடுங்கள் ”**

வார்த்தைகளைச் சொல்லி ஜெபிக்க முற்படாதீர்கள். உங்களுக்குப் பிடித்தமானப் பாடலைப் பாடுங்கள். இதுதான் துதி.

‘துதி’ என்பது ஏதோ பாடல்களை வேகமாகப் பாடுவது கிடையாது. உற்சாகம் தேவைதான். ஆனால், அது மாம்சத்தில் முயற்சி செய்யும் காரியம் அல்ல. துதி என்பது, கர்த்தர் எப்படிப்பட்டவர் என்பதை அறிக்கை செய்வதாகும். நீர் நல்லவர், வல்லவர், சர்வ வல்லமையுள்ள தேவன், கன்மலையிலிருந்து தண்ணீரை புறப்படச் செய்பவர், தண்ணீரை திராட்ச ரசமாக மாற்றுபவர்.. இப்படி கர்த்தர் எப்படிப்பட்டவர் என்று அறிக்கை செய்வதாகும். இப்படியாக நாம் துதிக்கும்பொழுது நாம் மனுஷர், களிமண்ணினால் உருவாக்கப்பட்டவர்கள், அவரே நம்மை உருவாக்கினவர் என்று நம் நிலைமையை உணருவோம். அப்பொழுது நமக்கு தாழ்மை வரும்.

துதிக்குப் பிறகு கர்த்தரை நாம் ஆராதிக்க வேண்டும். ஏதோ சில பாட்டுகளை மெதுவாகப் பாடுவது அல்ல. கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை நினைத்துப் பார்த்து நன்றி சொல்வதும், நம்மை முழுமையாகக் கர்த்தருக்கு அர்ப்பணிப்பதாகும் (ரோமர் *12:1*). இது வாழ்நாள் முழுவதும் செய்யவேண்டிய காரியம். நன்றியால் நம் உள்ளம் நிரம்பும்போது நாம் நம்மையும் மறந்து, கர்த்தரைமாத்திரம் நினைத்து அவரை ஆராதிக்க ஆரம்பிப்போம்.

இப்போது நாம் ஜெபிக்க ஆரம்பிக்க வேண்டும். முதலாவது கர்த்தருடைய ஊழியத்தைச் செய்பவர்களுக்காகவும், பின்னர் தேசத் தலைவர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும். அதன்பின்னர் மற்றவர்களுக்காகவும், நமக்காகவும் ஜெபிக்கவேண்டும்.

ஒருவருக்காக ஜெபிக்கும்போது, அவசரப்படக்கூடாது. யாருக்காக ஜெபிக்கிறோமோ அவர்களை மனக் கண் முன்னால் (நினைவில்) கொண்டுவர வேண்டும். இவர்களை ஆசீர்வதியும், இவர்களுடையத் தேவைகளை சந்தியும் என்று ஜெபிக்க வேண்டும். உடனே அடுத்தவர்களுக்காக ஜெபிக்க அவசரப்படக்கூடாது. அவர்களுக்காக அடுத்து என்ன ஜெபிப்பது என்று பரிசுத்த ஆவியானவரைக் கேட்கவேண்டும். அப்போது ஆவியானவர், இன்ன காரியத்துக்காக அவர்களுக்காக ஜெபம் பண்ணு என்று உங்களுக்கு நினைப்பூட்டுவார் (ரோமர் *8:26*). அவர்களுடைய சுகத்துக்காகவோ, பாதுகாப்புக்காகவோ ஜெபிப்பதற்கு ஆவியானவர் உங்கள் உள்ளத்திலே உணர்த்துவார். அப்படியே கீழ்ப்படிந்து ஆவியானவரின் நடத்துதலின்படி செய்யுங்கள். அவர்களுடைய தேவையை கர்த்தருடைய ஆவியானவர் அறிவார்.

*- தொடரும்.*